## புள்ளித்திட்டம்

## தமிழ் II

### பகுதி I

(விடைக்குறிப்புக்கள் மட்டுமே முழுமையான விடைகள் அல்ல)

1.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 2 | 2) 5 | 3) 4 | 4) 4 | 5) 2 |
| 6) 3 | 7) 2 | 8) 3 | 9) 1 | 10) 5 |
| 11) 2 | 12) 4 | 13) 1 | 14) 4 | 15) 1 |
| 16) 2 | 17) 2 | 18) 4 | 19) 1 | 20) 4 |

2. (அ) - ஆழ்ந்த நேரடி அனுபவங்களையே நாவல்கள் பொருளாகக் கொள்கின்றன.
- அனுபவத்தில் ஆழ்ந்தவனாக படைப்பாளி இருக்கும் போதே எழுத்து சிறக்கும்.
- மானிட உணர்வுகளினதும் வாழ்வோட்டத்தினதும் தன்மைகளாகவே நாவல் சிறப்படையும்.
- பொறுமையும் கூர்மையான அவதானமும் சிந்தனையும் அவசியமானது.
- விமரிசகர்கள் கதாபாத்திரங்களின் உறவுகளும் சித்திரிக்கப்படுமாற்றை நோக்குதல் வேண்டும்.
- கதை வளர்ச்சிக்கோ அல்லது தர்க்க ரீதியான சம்பவ ஒழுங்குக்கோ முக்கியத்துவம் தரப்படுவதில்லை.
- உருவம், உள்ளடக்கம் என்பன இணையும் போதே உன்னதமான ஆக்கங்கள் தோன்றும்.

(ஆ) 1. வண்டல் விளையாட்டு, பந்து விளையாட்டு, கழங்கு விளையாட்டு
2. வண்டல் விளையாட்டு - பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை
பந்து விளையாட்டு - அகநானூறு
கழங்கு விளையாட்டு - பெரும்பாணாற்றுப்படை, புறநானூறு
3. கதிர்கொய்த அரிதாளிண்கண் இருந்த குருவிகள் எழுவது விழுவதுவாய் துன்பமுறச் சிறைவிரித்தாடுவர்.
செல்வம் மிக்க மகளிரே பந்து விளையாடுவர்.
4. குருவிகள் எழுவது விழுவதுவாய் துன்பமுறச் சிறைவிரித்தாடுதல் மகளிர் பந்தாடுதலை ஒக்கும்.
வேதிகை போல உயர்ந்த எக்கர்க்கண்ணே இருந்து
5. செறிந்த உள்ளிடு பருக்கையையுடைய சிலம்பினையும் குறிய வளையினையுமுடைய மகளிர் வேதிகை போல உயர்ந்த எக்கர்க்கண்ணே இருந்து பொன்னாற் செய்யப்பட்ட கழங்கினால் விளையாடுவர்.
6. சிறிய உருண்டையான கற்களை மேலே எறிந்து விளையாடுதல்
ஈழத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிற் கொக்கான் வெட்டுதல் என அழைத்தல்.

3. **(அ) இளைய தலைமுறையும் இணையமும்**

- அறிமுகம் - இளைய தலைமுறையினர், இணையம் - அன்றாடம் கல்வி, வேலைகளை செய்தல், பொழுது போக்கு முதலான விடயங்களுக்கு இணையத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

- இணையத்தைப் பயன்படுத்துவதன் அவசியம் அல்லது பயன்பாடு.
  - தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் அல்லது பரிமாறுதல்
  - வேலைகளை இலகுபடுத்தல்.
  - கற்றல் மற்றும் மாணவர்களின் தேவைகளுக்கு உதவுதல்
  - பொழுதுபோக்கு விடயங்கள்
  - கற்றல் உள்ளீடுகள், பரீட்சைகள் மற்றும் முன்வைப்புக்கள் செய்தல்
  - சுயமாகக் கற்றல், பரீட்சைக்கு தோற்றுதல், பெறுபேறுகளை உடனேயே அறிந்துகொள்ளல்
  - தனிப்பட்ட ஆற்றலை வளர்த்துக்கொள்ளல்.

- இணையத்தைப் பயன்படுத்துவதால் இளையோர் எதிர்நோக்கும் சவால்கள் அல்லது பிரச்சினைகள்
  - இணையத்துடன் பல சமூகவலைத்தளங்கள் காணப்படுவதால் அவற்றை கட்டுப்பாடின்றி பயன்படுத்தல்
  - தேவையற்ற விடயங்களில் நாட்டம் கொள்ளல்
  - வயதுக்கு மீறிய செயற்பாடுகளில் ஈடுபடல்
  - கண் மற்றும் உடல், உள ரீதியான பாதிப்பு, தற்கொலை செய்தல்
  - நேரவிரயம் ஏற்படல், கவனக்கலைப்பு ஏற்படல்
  - தவறான, பொருத்தமில்லாத தொடர்பு ஏற்படல், சமூக விரோத செயல்களில் ஈடுபடுதல்
  - ஒழுக்கத்திலிருந்து விலகுதல்

- முடிவுரை - இணையப் பயன்பாட்டால் கல்வி, வேலை சார்ந்த முன்னேற்றங்கள் ஏற்படுவதோடு முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதால் அதிகமான பிரதிகூலங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது.

**(ஆ) இலக்கியம் காட்டும் விழுமியங்கள்**

- அறிமுகம் - இலக்கியம் என்பது இலக்கு + இயம் எனப்பிரித்து இலக்கு என்பது நோக்கத்தையும் இயம் என்பது எடுத்துக் கூறுதல் எனவும் ஆகி மக்களின் வாழ்க்கையின் நோக்கங்களை எடுத்துக்காட்டுவது எனப் பொருள்படுகின்றது.
- இலக்கியம் மக்களது இலட்சியத்தைக் காட்டுகிறது. காலத்தின் கண்ணாடி எனப்படுகிறது.
- குறித்த ஒரு காலத்தில் நடந்த சமூக நிகழ்வுகளை படம் பிடித்துக் காட்டும் தன்மையுடையது.
- விழுமியம் என்பதன் விளக்கம் - விழுமியம் என்பது மக்களுடைய வாழ்க்கையை உயர்த்தவும் செம்மைப்படுத்தவும் பயன்படும் ஒழுக்கவியல்சார் எண்ணக்கருவாகும்.
- இலக்கியங்கள் எமக்கு பல்வேறுபட்ட விழுமியங்களைக் காட்டுகின்றன.
- ஒழுக்கம், உண்மை பேசுதல், தருமம் செய்தல், கற்புநெறி, சகோதர பாசம், இலட்சிய வாழ்வு போன்றன அவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.
- ஒழுக்கம் - கம்பராமாயணம் ஒரு மனிதன் எப்படி வாழவேண்டும், வாழக்கூடாது என்பதற்கு சான்று
- உண்மை பேசுதல் - அரிச்சந்திர புராணத்தில் அரிச்சந்திரன் வாழ்வு
- தருமம் - தருமன் (அறத்தின் உருவம் போல்வார்)
- கற்புநெறி - சிலப்பதிகாரம் (கண்ணகி)
- சகோதரபாசம் - கம்பராமாயணம் (இராம இலக்குவன்)
- இலட்சிய வாழ்வு - அரிச்சந்திர புராணத்தில் அரிச்சந்திரன்
- முடிவுரை - தொகுத்துக் கூறுதல்.

**(இ) க.கைலாசபதியின் தமிழ்ப்பணிகள்**

- 1933 ஏப்ரல் 5ஆம் திகதி கோலாலம்பூரில் பிறந்தார். பெற்றோர் இளையதம்பி, கனகசபாபதி
- ஆரம்ப, இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு ரோயல் கல்லூரி ஆகியவற்றில் கற்றார்.
- உயர்கல்வியை பேராதனை பல்கலைக்கழகத்தில் கற்றார்.
- 'தமிழும் மேலைத்தேய வரலாறும்' என்ற தனது முதலாவது இளங்கலைமாணிப் பட்டத்தை 1957 இல் பெற்றார்.
- பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, வி.செல்வநாயகம், சு.வித்தியானந்தன், ஆகிகோரின் வழிகாட்டலின் கீழ் பட்டப்படிப்பை நிறைவு செய்தார்.
- இவர் மாணவராக இருக்கும்போது பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதியும் வானொலி நாடகங்களிலும் நடித்தார்.
- தினகரன் பத்திரிகையில் 5 ஆண்டுகள் பிரதம ஆசிரியராக கடமையாற்றினார்.
- 1962 இல் பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.
- இவருடைய தமிழ்ப்பணிகள் குறிப்பிடத்தக்கவையாகவும் பன்முகப்பட்டவையாகவும் உள்ளன.
- இவரது தமிழ்ப்பணிகளில் ஒப்பியல் ஆய்வு, திறனாய்வுத்துறை, இதழியல் பணிகள் நூற்பணிகள் போன்றவை குறிப்பிடத்தவைகளாகும்.
- இவரது ஆய்வில் ஒப்பியல் ஆய்வு குறிப்படத்தக்கவையாகும்.

  உ-ம் இந்தியக் கவிஞர்களான ரவீந்திரநாத் தாகூரையும் பாரதியையும் ஒப்பிட்டு ஆய்வு செய்தமை
- பண்டைத்தமிழ் வாழ்வும் வழிபாடும் என்ற நூலை மாக்சிய கண்ணோட்டத்தில் ஆய்வு செய்தமை. -
- திறனாய்வு நூல்கள் பலவற்றை எழுதியமை.
- இதழியல் பணியும் குறிப்பிடத்தக்கவையாகும்.

  உ-ம் கவிதை, சிறுகதை, நாவல், மற்றும் ஈழத்து மண் சார்ந்து பத்திரிகைகளில் எழுதியமை.
- கட்டுரைகளையும் எழுதியுள்ளார் - பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், பேரரசும் பெரும் தத்துவமும்.
- ஆய்வுநூல்ப் பணிகள் - அடியும் முடியும் என்ற நூலிலும் புலைப்பாழியும் கோபுர வாசலும் என்ற கட்டுரையிலும் நந்தனாரின் வாழ்க்கைப் பின்னணியை எழுதினார்.
- நூற்பணிகள் - கவிதைநயம், இலக்கியமும் திறனாய்வும்
- இறப்பு - 1982 டிசம்பர் 06

**(ஈ) பொருளாதார வளர்ச்சியில் மக்களின் பங்களிப்பு**

- அறிமுகம் - பொருளாதாரம் என்பதன் விளக்கம்.
- மக்களின் வாழ்வில் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்.
- மக்களின் வாழ்க்கை முழுமைக்கும் பொருளாதாரம் பிரதான காரணியாகக் காணப்படுதல்.
- நாட்டின் பொருளாதார மேம்பாடும் மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் செல்வாக்கும்.
- உள்நாட்டு உற்பத்தி பற்றிய பார்வை - விவசாயம், கைத்தொழில், பாரம்பரிய உற்பத்திப் பொருட்கள், கைவினைப் பொருட்கள்
- உற்பத்தி ரீதியான வளர்ச்சிகள் - நிலப்பயன்பாடு, உற்பத்திப்பெருக்கம், தன்னிறைவு, தொழில்வாய்ப்பு,
- பொருளாதார வளர்ச்சி, வளர்ச்சியின்மைக்கான காரணங்கள்.
  - ஏற்றுமதி அதிகரித்தலும் இறக்குமதி குறைதலும்
  - அந்நியச் செலாவணி மூலம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைதல்.
  - பொருளாதாரம் நலிவடைதல்
  - பொருட்களின் கேள்வி குறைதல் (பொருளாதார பாதிப்பு)

- பொருளாதாரம் மக்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கம்.
  - மக்களின் சகல நிலைகளிலும் தாக்கம் ஏற்படல்.
  - துறை ரீதியான தாக்கம் (கல்வி, அபிவிருத்தி)
- முடிவுரை - விடயங்களைத் தொகுத்துக் கூறுக.

**(உ) கற்றாங்கு ஒழுகுக.**

- அறிமுகம் - உலகில் கல்வியைக் கற்று கற்றதற்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல்.
- மனிதனுக்கு அவசியமான ஒரு விடயம் கல்வியாகும்.
- மனிதனை நல்வழிப்படுத்த, அவனது நிலையை உயர்த்த, வருமான வாய்ப்புக்களை அதிகரிக்க கல்வி அவசியமாகும்.
- கற்றபடி ஒருவன் ஒழுகுவதனூடாக உலகத்துக்கு ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய ஆற்றல் வளரும்.
- கல்வியானது எண், எழுத்து என்ற இரண்டையும் ஒருங்கே கொண்டுள்ளது.
- எண் என்ற அறிவியலும் எழுத்து என்ற மொழியறிவும் இரு கண்களாகக் கொள்ளப்பட வேண்டியவை.
- ஒரு உடலுக்கு கண் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு எண்ணையும் எழுத்தையும் கற்பதன் மூலம் கல்வியைக் கற்று உயர்ச்சி பெறும் போது அக்கல்விக்கு ஏற்றவாறு எமது வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும்.
- கற்றபடி ஒழுகுவதால் பல நன்மைகள் ஏற்படும்.
- நூல்களை மட்டுமன்றி அனுபவக் கல்வியும் நமது வாழ்க்கையை சிறப்பாகவும் ஒழுக்கமாகவும் அமைத்துக்கொள்ள உதவும்.
- எமது வாழ்க்கை உயர்வதோடு வாழ்வும் செம்மையடையும்.
- முடிவுரை - கற்றாங்கு ஒழுகுவதால் ஏற்படும் நன்மைகளைத் தொகுத்துக் கூறல்.

## பகுதி II

4. (அ) - பல்லவர்காலத்தில் எழுந்த பக்திசாரா இலக்கியங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
- செய்யுள் இலக்கியங்கள்
  பெருங்கதை, கொங்குவேளீர் மாக்கதை, உதயணன் மாக்கதை, பாண்டிக்கோவை, பாரத வெண்பா முத்தொள்ளாயிரம்
- இலக்கண நூல்கள்
  சங்க யாப்பு, பாட்டியல் நூல்
- உரைநடை இலக்கியங்கள்
  ஸ்ரீ புராணம், கயசிந்தாமணி, இறையனார் களவியலுரை

(ஆ)- சங்ககால மானிடக் காதல் மரபில் கையாளப்பட்ட அகப்பொருள் மரபுகள் பல்லவர்கால பக்தி இலக்கியங்களில் சமய மெய்யடியார்களால் கையாளப்பட்டுள்ளமை.
- மானிடக்காதல் தெய்வீகக் காதலாக மாறியமை.
- தூது அனுப்பும் முறை கையாளப்பட்டமை.
  உதாரணம் - சம்பந்தரின் ‘‘சிறையாரும் மடக்கிளியே இங்கே வா…’’
- சங்ககால உடன்போக்கு முறையின் பயன்பாடு
  உதாரணம் - நாவுக்கரசர் ‘‘முன்னம் அவனுடைய நாமம்….’’ என சிவனுடன் உடன்போதல்.
- கைக்கிளை மரபு கையாளப்படல் - ஆண்டாள் விஸ்ணுவை ஒருதலையாகக் காதலித்து அவரை அடைய முற்படல்
  உதாரணம் - ‘‘கற்பூரம் நாருமோ கமலப்பூ நாருமோ…’’
- சங்ககால மடலேறும் முறை காணப்படல்
  உதாரணம் - திருமங்கையாழ்வாரின் பெரிய திருமடல், சிறிய திருமடல்

(இ) - அறிமுகம் - பல்லவர்கால பக்தி இயக்கம் பற்றிய விளக்கம். பக்தி இயக்கத்தில் பங்கெடுத்தவர்கள்.
- பக்தி இயக்கத்தை வளர்த்தெடுக்க நாயன்மார்களும் ஆழ்வார்களும் கையாண்ட வழிமுறைகள்
  - பல்வேறு பாவணை - நாயகி நாயகன் பாவம் (ஆண்டாள், விஸ்ணு)
  - ஊர்கள் தோறும் தலயாத்திரை சென்று அங்குள்ள இறைவன் இறைவி புகழ்பாடுதல்
    உதாரணம் - சம்பந்தர் திருவையாற்று திருத்தலத்தினைப் பற்றிய வர்ணனை
  - தமிழோடு இசைகூட்டி பாடல்களைப் பாடுவர்
    உதாரணம் - நாவுக்கரசர் - ‘‘தமிழோடு இசைபாட மரந்தறியேன்….’’
  - அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியமை.
    உதாரணம் - சுந்தரர் செங்கட்டிகளை பொன்கட்டிகளாக்கியமை.
  - நாட்டார் இயல்சார்ந்த இலக்கிய வடிவங்களை கையாண்டமை.
    உதாரணம் - மாணிக்கவாசகர் - திருவாசகத்தில் ஊஞ்சல், அம்மானை, பொற்சுன்னம்
  - வடமொழி புராண இதிகாச கதைக்கருத்துக்களை இணைத்துப்பாடியமை.
    உதாரணம் - சம்பந்தரின் பாடல்களில் இராவணன் கைலைமலையை பெயர்த்தவர்களாக கூறப்பட்டிருத்தல்.

- சிற்றிலக்கிய வடிவங்களைக் கையாள்தல்
  உதாரணம் - பதிகம், உலா, அந்தாதி
- மன்னர்களையும் மக்களையும் சமண சமயத்திலிருந்து மீளவும் சைவத்திற்கு அழைத்து வந்தமை.

5. (அ) - அறிமுகம்
- கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றம்
- மேலைத்தேய இலக்கியப் பாரம்பரியம், அறிமுகம்
- அச்சியந்திரத்தின் அறிமுகம்
- நவீனத்துவ சிந்தனைகளின் தோற்றம்
- சமூக மாற்றம் - உயர் வகுப்பினரின் தோற்றம்.

(ஆ) - அறிமுகம்
- இலக்கணத் தமிழ் மொழிநடை கையாளப்படும்
  உதாரணம் - கந்தபுராண வசனநடை, பெரியபுராண வசனநடை
- பிற்காலப்பகுதியின் இலக்கியத் தேவை கருதி மொழி எளிமையாக்கப்படல்
- நிறுத்தற்குறியீடுகளின் பிரயோகம்
- ஆக்க இலக்கியங்கள், கண்டன பிரசுரங்கள் என்பவற்றில் பேச்சுழக்கு மொழி கையாளப்பட்டமை.
- தமிழ் எழுத்துக்கள் எழுத்துச்சீர்திருத்தங்களுக்குள் உள்வாங்கப்படல்
  உதாரணம் - வீரமாமுனிவரின் பணிகள்
- ஆங்கில சொற்பிரயோகம்
- தமிழில் அங்கத உரைநடையின் தோற்றம் அங்கதப்பண்பை வெளிப்படுத்தியமை
  உதாரணம் - பரமார்த்த குருகதை

(இ) - அறிமுகம்
- ஐரோப்பியர் வருகையை அடுத்து வந்த மேலைநாட்டவர்
- பெஸ்கி அல்லது தைரியநாத சுவாமி என அழைக்கப்பட்ட இவர் இலக்கிய சுவடிகளைத் தேடி 'சுவடிதேடும் சுவாமிகள்' என இந்நூற்றாண்டில் போற்றப்பட்டார்.
- இவரது இலக்கியப் பணிகள்
  - காப்பியப் பணி - தேம்பாவணி
  - சிற்றிலக்கியப் பணி - திருக்காவல் ஊர்க்கலம்பகம், கித்தேரி அம்மன் அம்மானை
  - உரைநடைப்பணி - வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம்
  - அங்கத இலக்கியம் - பரமார்த்த குருகதை
  - கண்டன நூல் பணி - பேதகம் மறுத்தல்
  - இலக்கண நூல் பணி - தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம்
  - அகராதிப்பணி - சதுரகராதி
  - தொகுப்புப் பணி - தமிழ் நீதிநூல்களின் தொகுப்பு
  - எழத்தச்சீர்திருருத்தப் பணி - தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணிக்கு வித்திட்டார்.

6. (அ) பள்ளு இலக்கியத்தின் அமைப்பு
ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் - கதிரைமலைப்பள்ளு
போர்த்துக்கேயர் காலம் - ஞானப்பள்ளு
ஒல்லாந்தர் காலம் - தண்டிகைக் கனகராயன் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு

(ஆ) மதப்பரப்புகைக்காக அதிகளவு கிறிஸ்தவ இலக்கியங்கள் தோன்றின
கிறிஸ்தவ மதத்திற்கான அரச ஆதரவு
-தொம் பிலிப் - ஞானார்ந்த புராணம்
- பேதுருப் புலவர் - அர்ச்சயாகப்பர் அம்மானை
- அருளப்பநாவலர் - திருச்செல்வர் காவியம்
- கூழங்கைத் தம்பிரான் - யோசெப் புராணம்
- மெல்லோ பாதிரியார் - மருதப்ப குறவஞ்சி, சத்திய சமயம்

(இ) ஒல்லாந்தர் கால அரசியல் நிலை
ஒல்லாந்தர் கடும் போக்கைக் கடைப்பிடிக்காமை
சைவசமயம் சார்ந்த இலக்கியங்களைப் படைக்கக்கூடிய புலவர்கள் தோற்றம்
போர்த்துக்கேயர் காலத்தில் காணப்பட்ட அடக்குமுறைகளால் ஆலயங்கள் அழிக்கப்பட்டமை,
வழிபாடுகள் தடுக்கப்பட்டமையால் விரதங்கள் மூலம் வழிபடவும் தல மகிமையை வெளிப்படுத்தும் இலக்கியங்கள் அதிகம் தோன்றின
உதாரணம் - வரதபண்டிதர் - சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம், பிள்ளையார் கதை
கல்வளை அந்தாதி, மறைசை அந்தாதி, வெருகல் சித்திரவேலாயுதர் காதல்

7. (அ) பாவலர் துரையப்பாப்பிள்ளை

- பிறப்பு - யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் அருளம்பலம் தங்கம்மா தம்பதியினருக்கு 1882.10.12 இல் மகனாகப் பிறந்தார்.
- கல்வி - தெல்லிப்பழை ஆங்கில வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும், வட்டுக்கோட்டை மிசனரியிலும் 1900 இல்கேம்பிரிட்ஜ் உயர்நிலைப்பள்ளியில் இறுதித்தேர்விலும் சித்தியடைந்தார்.
- பணிகள்
  - பாணந்துறை தூய யோவான் கல்லூரி ஆசிரியர்.
  - பம்பாய் கோலாலம்பூர் மிஷன் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்.
  - 1900 இல் தெல்லிப்பழை ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் அதிபர்
  - 1910 இல் மகாஜனக் கல்லூரியை ஆரம்பித்தார்.
  - 1926 இல் சரஸ்வதி தமிழ் வித்தியாசாலையை நிறுவி வளர்த்தெடுத்தார்.
- படைப்புக்கள்
  - பாரதியைப் போன்று தேசிய பின்னணியில் வாழ்ந்த கவிஞர், பொதுமக்களுக்கு பொருள் விளங்கத்தக்க படைப்புக்களைத் தந்தவர். பெண்கல்வி, சாதி, சீதனவிவகாரம், தேசாபிமானம் முதலான கவிதைகளை எழுதினார். இவரது கவிதைகள் ''சிந்தனைச் சோலை'' எனும் தொகுதியாக வெளிவந்துள்ளது.
  - முன்னைய கவிதை மரபுக்குப் புறம்பாக உள்ளடக்கத்திலும் புதுமையைப் படைத்தவர்.
  - இசை வடிவங்களைப் பயன்படுத்தியும் நூல்களை எழுதியுள்ளார்.

    உதாரணம் - யாழ்ப்பாண சுவதேசக் கும்மி (1907)<br>எங்கள் தேசநிலை (1917)<br>கீதோபதேச கீதரச மஞ்சரி (19011)
  - கும்மிப்பாடல் மரபினை சமூகச் சார்புக்கு ஏற்ப மாற்றியவர் - சுவதேசக் கும்மி
  - ஈழத்து நவீன கவிதையின் முன்னோடியாகவும் சமூக சீர்திருத்தவாதியாகவும் மிளிர்ந்தவர்.
- 1929.06.24 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

(ஆ) ம.மு.உவைஸ்

- பிறப்பு - 1922 இல் கொழும்பு - காலி நெடுஞ்சாலையில் உள்ள கொறக்கானையில் மகுமூது லெப்பைக்கும் சைனாம்பு நச்சியாருக்கும் மகனாகப் பிறந்தார்.
- கல்வி
  - ஹேனமுல்ல அரசினர் முஸ்லிம் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைப் பயின்றார்.
  - ஆங்கிலக் கல்வியை தக்ஸலா வித்தியாலயத்தில் பயின்றார்.
  - சுவாமி விபுலாநந்தரின் வழிகாட்டலில் கலைமாணிப் பட்டம் பெற்றார்.
  - போராசிரியர் சு.வித்தியானந்தன், போராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஆகியோரின் வழிகாட்டலில் முதுமாணிப்பட்டம் பெற்றார்.
- பேராசிரியர் பணி
  - மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.
  - இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்கென தனியானதொரு துறையினைத் தோற்றுவித்தபோது அதன் தலைமைப் பதவியை அலங்கரித்தார்.
- தமிழ்ப்பணிகள்
  - முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு பற்றிய ஆய்வில் ஈடுபட்டார்.
  - இவரது முதுகலைமாணிப்பட்ட ஆய்வு முஸ்லிம் இலக்கியம் துலங்க வழிகாட்டியது.
  - தமிழ் இலக்கியத்திற்கு முஸ்லிம்கள் ஆற்றிய தொண்டு என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதினார்.
  - இஸ்லாமிய இலக்கியங்கள் குறித்து தினகரனில் பல கட்டுரைகளை எழுதினார்.
  - வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் 1959 முதல் நவீன கீழைத்தேய மொழிகள் துறையின் தற்காலிகத் தலைவராகவும் பணிபுரிந்தார்.
  - 1976 இல் கலாநிதிப் பட்டத்திற்காக தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் காப்பியங்கள் என்ற ஆய்வினை மேற்கொண்டார்.
  - மேலும் பல நூல்களை எழுதினார் - இஸ்லாமும் தமிழும், இஸ்லாமியத் தென்றல் (1961), ஞானச்செல்வர் குணங்குடியார், பெருமனார் பெருவாழ்வு, Muslim Contribution to Tamil Literature, Muslim Epics in Tamil Literature

(இ) மஹாகவி து.உருத்திரமூர்த்தி

- பழைய கவிதை முறையினை சொல், பொருள், நடை, யாப்பு முதலியவற்றில் மாற்றியமைத்தவர்.
- சாதாரண மக்களின் வாழ்வை தமது சமூகப் பொருளாகக் கொண்டுள்ளார். - உ-ம் வள்ளி, கல்லழகி
- பேச்சோசைப் பண்பு, பேச்சோசைப்பாங்கு, கிராமிய வழக்குச் சொற்கள் என்பன இவரது கவிதைகளில் இழையோடுகின்றன. - உ-ம் மீண்டும் தொடங்கும் மிடுக்கு, புள்ளியளவில் ஒரு பூச்சி
- சிறுசிறு வாக்கியங்களை கவிதைகளில் கையாண்டுள்ளார். - உ-ம் மீண்டும் தொடங்கும் மிடுக்கு
- தற்கால வாழ்க்கை அனுபவங்களை தமிழ்க் கவிதைகளில் எழுதினார் (மஹாகவியின் ஆறு காவியங்கள்)
- கவிதைகளை உயிரோட்டமாகப் படைத்துள்ளார்
- குறும்பா என்ற வடிவத்தைப் பயன்படுத்தினார். - உ-ம் முத்தெடுக்க மூழ்குகிறான் சீலன்
- கிராமிய மண்வாசனையை கவிதையில் கையாண்டமை.
- குறியீடுகளைக் கொண்டு தனது கவிதைகளை வெளிப்படுத்தியமை. - உ-ம் தேரும் திங்களும்

- சாதிய ஒடுக்குமுறையை எதிர்த்தமை
- இவருடைய கவிதைகள் சமூக முன்னேற்றம், அறிவியல் முதலான பொருளை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றன.

(ஈ) டொமினிக் ஜீவா
- ஈழத்து எழுத்தாளர், இதழியலாளர், பதிப்பாசிரியர்
- 1966 இல் இருந்து மல்லிகை என்ற சஞ்சிகையை வெளியிட்டவர். 401 இதழ்கள் வெளிவந்தன.
- ஆக்க இலக்கியவாதி, சமூக அடக்குமுறைகளுக்கெதிராக ஒடுக்கப்பட்ட சமூகத்தின் கலகக் குரலாக ஒலித்தவர்.
- 1946 இல் சுதந்திரன் சிறுகதைப் போட்டியில் ''எழுத்தாளன்'' என்ற சிறுகதைக்காக முதற்பரிசு பெற்றார்.
- இவரது வாழ்வியல் அம்சங்கள் ''எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்'' என்ற நூலாக வெளிவந்தது.
- முற்போக்குப் படைப்பாளியாகத் திகழ்ந்தவர்
- இவரது சிறுகதைத் தொகுப்புகள் - தண்ணீரும் கண்ணீரும், சாலையின் திருப்பம், பாதுகை, வாழ்வின் தரிசனங்கள், டொமினிக் ஜீவா சிறுகதைகள் ஆகியனவாகும்.
- தண்ணீரும் கண்ணீரும் தொகுப்பு சாகித்ய மண்டல விருதினைப் பெற்றது.
- எங்கள் நினைவுகளில் கைலாசபதி என்ற கட்டுரைத் தொகுதியை வெளியிட்டார்.
- தனது வரலாற்றினை ''எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்'' என்ற பெயரில் எழுதினார்.
- இலங்கையின் அதியுயர் விருதான சாகித்ய மண்டலப் பரிசினை இரண்டு தடைவ பெற்றார்.
- மூதறிஞர் விருதினை 1998 இல் கம்பன் கழகம் வழங்கியது.

8. (அ) (I) ''தென்னாசியாவின் அழிக்கப்பட்ட இரண்டாவது பெரிய அரிசி ஆலையான சவளக்கடை அரிசி ஆலை மீண்டும் இயங்குமா?''

(II) ''வாழ்க்கையைச் சிறப்பாக வாழ்வதற்கு உடல் ஆரோக்கியமும் மன அமைதியும் இன்றியமையாதன.''

(III) கண்ணன் நாளைவருவான் என்று

(IV) குருவி கூடு கட்டியது - இயல்பு
குருவிக்கூடு மரத்தில் தொங்கியது - விகாரம்
ஆடு குட்டி போட்டது - இயல்பு
ஆட்டுக்குட்டி துள்ளி ஓடியது - விகாரம்

(V) வினையடியாகப் பிறக்கும் ஆக்கப்பெயர் - வாழ்வு
தொழிற்பெயர் - வாழ்தல்
வினையாலணையும் பெயர் - வாழ்ந்தவன்

8. (ஆ) (I) குற்றியலுகரப் புணர்ச்சி

- குற்றியலுகரவீற்றுச் சொற்களின் முன் வருமொழி முதலில் உயிர் வரின் குற்றியலுகரம் கெட்டுப் புணர்தல் குற்றியலுகரப் புணர்ச்சி எனப்படும். அறுவகைக் குற்றியலுகரமும் புணர்ச்சியில் கெடும்.
  உதாரணம் - பட்டு + ஆடை = பட்டாடை
  காது + அடைத்தது = காதடைத்தது

- அகப்புணர்ச்சியிலும் ஈற்றுகரம் கெடும் - (அது + ஐ = அதை)
- தற்காலத்தில் புறப்புணர்ச்சியில் உயிர் வரினும் பெரும்பாலும் குற்றியலுகரம் கெடுவதில்லை.
  உதாரணம் - அவர்தான் எனக்கு உதவியவர்.
- தற்காலத்தில் குற்றியலுகரம் புணர்ந்த பல சொற்கள் அகப்புணர்ச்சியாகவே பெரும்பாலும் வழங்கப்படுகிறது.
  உதாரணம் - காற்றாடி

(II) அளபெடை
- எழுத்துக்கள் தமது மாத்திரையில் நின்று நீண்டொலிப்பது அளபெடை எனப்படும்.
- இது இருவகைப்படும்.
  1. உயிரளபெடை - உயிரெழுத்துக்களில் நெட்டெழுத்து ஏழும் தமக்குரிய மாத்திரையிலிருந்து நீண்டொலிப்பது உயிரளபெடையாகும்.
  உதாரணம் - ஓஒதல் - சொல்லின்முதல்
  தொழாஅள் - சொல்லின் இடையில்
  தழீஇ - சொல்லின் இறுதி

2. ஒற்றளபெடை - மெய்யெழுத்துக்களில் மெல்லின எழுத்துக்கள் ஆறும் ர், ழ் தவிர்ந்த இடையின எழுத்துக்கள் நான்கும் ஆய்த எழுத்துமாகிய பதினொரு எழுத்துக்களும் தமக்குரிய மாத்திரையிலிருந்து நீண்டொலிப்பது ஒற்றளபெடை ஆகும். அளவெடுப்பதற்கு அடையாளமாக அதே ஒற்றெழுத்து அதன் அருகில் எழுதப்படும். இதன் மாத்திரை ஒன்றாகும். இவை சொல்லின் இடையிலும் இறுதியிலும் அளபெடுக்கும்.

உதாரணம் - இலங்ங்கு - சொல்லின் இடை
திரள்ள் - சொல்லின் இறுதி

(III) முதல்வினை

- ஒரு வாக்கியத்தின் அடிப்படைப் பொருளைத் தரும் வினை முதல்வினை ஆகும். அதாவது பிரதான பொருளைக் குறிக்கும் வினையாகும்.
  உதாரணம் - வந்திருந்தான், பேசிக்கொண்டிருந்தான்,
  இங்கு வா, பேசு என்பன முதல்வினைகளாகும்.